உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத்

தருமபுர ஆதீனம் 24-வது குருமூர்த்தியாக

எழுந்தருளியுள்ள

# ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியர் ஆற்றுப்படை

(குறிப்புரையுடன்)

இவ்வாதீன அடியார்குழாத்துள்

ஸ்ரீ மௌன சோமசுந்தரத் தம்பிரானவர்களால்

பதிப்பிக்கப்பெற்றது.

1941

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருநந்திதேவர் மரபு மெய்கண்டான் சந்தானம்
தருமபுரவாதீனம்

24-வது குருமூர்த்தமாகி யெழுந்தருளிய


# ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியர் ஆற்றுப்படை

இயற்றினோர்


வித்துவான், திரு, இராம, கோவிந்தசாமி பிள்ளை
தமிழ் விரிவுரையாளர்,
அரசர் கல்லூரி, திருவையாறு.


1—41.

Sri Chandra Press,
Mayavaram.



திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

உச-வது மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

# முகவுரை

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

நீர்புடைசூழும் இந்நிலவுலகின்கண் காணப் படும் உயிர்த் தொகுதிகள் அறிவு வகையான் அறுவகைப்படும். அவற்றுள் கண்டு கேட்டுண் டுயிர்த்துற்றறிதலோடு தக்கவின்ன தகாதனவின்ன வென்றெக்க உன்னும் பகுத்தறிவும் உடையமக்கட் பிறப்பே தக்கதென அறிஞர் ஆய்ந் தறுதியிட் டுரைப்பர். ஏனெனில் இப்பிறப்பே ஒப்புவமை இல்லா தவனாகிய உமையொரு கூறனை அமைவுடன் வழுத்திப் பேரின் புறற் கேதுவாயிருத்தலின் என்க.

இம் மக்கட் பிறப்புற்றவர்களை அறிவுவகை யானும் ஒழுக்கவகையானும் உடல்வகையானும் கொள்கை வகையானும் நிலவகையானும் பல்லா றுகப் பகுப்பர். அவர்கள் பாசவகையான் மூவகை யுறுவர் என நம் சைவசித்தாந்த நலமுறு நூல்கள் நுவல்வனவாம். நாம் மலமுற்றவர்; ஆண்டவன் மல மற்றவன் என்பதை அமலன், நிர்மலன் மலரகிதன், அநாதி மலமுத்தன் என்னும் பெயர்கள் வலி யுறுத்தா நிற்கும். உயிர்கள் அழியாதன உடலங்கள்,

உலகங்கள், அழிவுறுவன. அழிவுறுமுடலோடு, அழியாத தன்மை வாய்ந்த உயிர்கள் ஒன்று படுகின்றன.

உயிர்கட்கு, ஒரு பொருளை விழைதலும், வெறுத்தலும் ஆய இயற்கைத் தொழிற் பண்புகள் உண்டு. அவற்ரோடு, அறிவு, இச்சை, தொழில் களும் உண்டு. ஆண்டவன், உயிர்கள் பொருட்டே இச்சை, ஞானம், கிரியை ஆய மூன்று சத்திகளைக் கொண்டு, அவ்வவ்வுயிர்கட் கேற்ப (பருவங்கட் கேற்ப) அவ்வந்நுகர் பொருளை நுகருவிப்பன். அந் நிலையில், தெய்வ மென்பதோர் சிந்தையுண்டாய போது, "நானுர் என்னுள்ளமார், ஞானங்களார், என்னையார் அறிவார்," என மக்கட் பிறப்புறு முயிர்கள் அறியத் தொடங்கும். தொட்டுக் காட்டாத வேலை சுட்டுப் போட்டாலும் வாராதென்ப துலகர் மொழி யாகலின்; மானிடர்களை, மானைக்காட்டி மானைப் பிடிப்பது போன்று மூவுருவுடையவாண்ட வன் அருளுருவத்திருமேனியையுமொருவி மானிடப் படிவந் தாங்கிக் குருவுருக் கொண்டருளுவன். அந் நிலையால் குருக்கள், வித்தியாகுரு, போதககுரு, ஞானகுரு வெனப் பலதிறப் படுவர். இறைவன் அருளே திருவுருவாக வந்தருள்வது ஞானகுருவின் நிலையிலேயாம். அங்ஙனம் வந்தருளிய ஞான தேசிகரை வழுத்துதலே யிறைவனை வழுத்தியதோ டொக்குமாகலின் அடியேன் இவ் வாற்றுப்படை மூலம் வழுத்தலாயினன். அங்ஙனம் வழுத்தப்புகுந்த இந்நூற்பெயர், **ஸ்ரீ சண்முகதேசிகர் ஆற்றுப்படை**

யென்பதாகும்; திருக்கயிலாய பரம்பரைத் திருநந்தி மரபு மெய்கண்ட சந்தானத்துண்மையாசிரியர்மார்களுள் 24-வது ஞானதேசிகர் ஆவர், **இவ் வாற்றுப் படைத் தலைவர். ஸ்ரீ** சண்முகதேசிக ஞானசம்பந்த பண்டாரசந்நிதி அவர்கள் மீதியற்றப்பட்ட ஆற்றுப் படையெனும் பிரபந்தம் எனவிரித்துப் பொருள் கோடறகும்.

இதன் இலக்கணம் வருமாறு:—

"ஒன்று மகவலா லொண்புலவர் யாழ்ப்பாணர்
குன்றுத சீர்ப்பொருநர் கூத்தரே-யென்றிவரை
யாங்கொருவ னாற்றுப் படுத்த பரிசறைந்தாற்
பாங்காய வாற்றுப் படை."

என்பது வெண்பாப் பாட்டியல், இவ்வாற்றுப்படை 659 அடிகளையுடைய அகவற்பாவால், செந்தமிழ்ப் புலவராய பேரன்பினரை ஞானத்திருமேனிகொடு விளங்காநின்ற ஸ்ரீ சண்முகதேசிக பரமாசிரியர் இடத்து, ஆற்றுப்படுத்தியதாகும்.

"கண்ணுத லுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்று-மொண்டருமை
யாதீன சண்முகப்பே ராசிரிய வென்றுலகம்
பேர்பரவிப் பேறே பெறும்"

என வுலகம் உன்னி யுயர்கதி யெய்தும்; ஆகலின் **ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசிரியர்** ஒண் மலர்த்தாளை யுருக வழுத்துதலைவிடச் சிறந்த பேறின் றென்பதூஉம் அத்திருவடி மலர்களைப்

பற்றுதலே பந்தமறுத்தற்கேது வென்பதூஉம் தேற்றுவிக்கும் பொருட்டே யிந்நூல் எழுந்ததாகும். புலவர்கட்கிம்மையிற் றிருவும் புகழும், மறுமையிற் சுவர்க்கப்பேறும், அம்மையிற் செம்மலர் நோன்றாள் சேறலும் வேண்டற்பால தாகும். இந்நெறி யேனையர்மாட்டும், புரவலர் மாட்டும், எய்துதல் கூடாது. இப்பரமாசிரியரை அன்போடு பரவி யெய்துவரேல் மும்மைப் பேறுஞ் செம்மையி னெய்துவரென்ப தொருதலையாம் எனத்துணிவுறுத்தவே கூறப் பட்டதாகுமன்றிப் பிறவற்றிற்கன்றாம். திருக்கயிலாயபரம்பரைத் திருநந்தி தேவர் மரபு, மெய்கண்ட சந்தானத்துறு நம் பரமாசிரியர் ஞானபீடத்தி லெழுந்தருளியிருப்பது **திருத்தருமையேயாம்** என்பதனை யுலகம் நன்குணருமாக. வேதநெறியிற் சிறந்தது சைவநெறி. அதனிற் சிறந்தது பத்திநெறி. அப்பத்திநெறி குருலிங்க சங்கமபத்தி யென முப்பகுதித்தாம். அம் முப்பத்தியின் முதன்மைத் தாயது குருபத்தியே யென்பது அனைவருமறியக் கிடக்கும்.

"ஈசனுக்கிழைத்த குற்றங் தேசிகனெண்ணித் தீர்க்கும்
தேசிகற் கிழைத்த குற்றம் குரவனே தீர்ப்பதன்றிப்
[போவதெவாறே"

என்பது திருவிளையாடற்புராணம் ஆகலின்,

மகா குரு சந்நிதானம் அவர்களை உளம் உரை உடல் ஆகிய மூன்றானும் எண்ண, ஏத்த, எழிலுற வணங்கலே யேற்புடைத்தாகும் என்றுகண்டேன்.

அன்னவாரூற்ற முயன்றேன். குருவருள் தூண்ட லாற் பெருக நிறைவேறிற்று. அன்பறிவொருங் குடை யின்பமர் சைவநன்மக்கள் இதனைக்கண்டு மகிழ்வா யேற்று, ஒன்றுக்கும் பற்று எளியேனை நன்கூக்கி யருள்வாராக.

குருவருள் சிறக்க.

திருவையாறு,
12—11—41.

இங்ஙனம்,
வித்துவான், இராம. கோவிந்தசாமி பிள்ளை,
தமிழாசிரியர்.

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

# சிறப்புப்பாயிரம்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

---

இறைவனுமை யுடனருளு மெழிற்கயிலைப் பெருங்கோல மிவண தாக
வறையுமிரு பத்தேழா மாலயங்கள் போற்றிவரு மறத்தை மேவித்
தரையினிற்றன் பேர்நாட்டுந் தருமபுரி யாதீனந் தமிழுஞ் சைவத்
திருநெறியும் வளர்ந் தோங்கச் செயுமருளா லுயர்சீர்த்தி செப்பற்
[பாற்றே

மண்ணதனிற் கைலையதன் மாமரபாய் வருங்குரவர் வரிசை தன்னில்
எண்ணியவு மிருபதொடு மீரிரண்டாம் பெருங்குரவ
[னெம்வாழ் வாவோன்
சண்முகதே சிகவடிகள் தனிச்சீரை யொருங்கீட்டித் தழைத்த வன்பு
நண்ணியவாற் றுப்படையா நல்வளஞ்சேர் நூனெறியி னல்கி னானால்

கல்விநிறை திருவாளன் கலைப்பயனு மிறைவணக்கம் காலமெல்லாம்
புல்லுமவன் றன்மனத்திற் பொருந்தியொளிர் உமையம்மை பொங்கு
[மன்பால்
நல்கியநன் மனைவாழ்வோன் நற்றமிழின் பெருந்தொண்டெந்
[நாளுஞ் செய்வோன்
எல்லையில்பல் புகழாளன் **கோவிந்த சாமி**யெனு மியற்பே ரோனே.

திருவையாறு,
9—11—41.

இங்ஙனம்
**ஆர். வேங்கடாசலம் பிள்ளை,**
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், அரசர் கல்லூரி.

சிவமயம்
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன
தேவாரபாடசாலைத் தமிழாசிரியர்,
**திரு. K. ஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள்,**
அளித்த சிறப்புப்பாயிரம்

**நேரிசை ஆசிரியப்பா**

---

சீர்சால் நான்மறை யோர்சால் குவட்டினும்
பன்னுறை பழுநிய அலகா வாகம
நுண்ணூ லகட்டினு முண்ணத் தெவிட்டாத்
திருநெறிச் செந்தமிழ் அருள்குழை யமிழ்தினுங்;
கன்மலி குன்றினும் என்மனக் குன்றினும்
உலாவு பழநிக் கலாவ மஞ்ஞையன்
நலமலி சிறப்பொடு நாப்பண் வைக
அம்மையோ டப்பன் அமர்ந்தினி திருக்கும்
கயிலையம் பொருப்பிற் பயிறிரு நந்திக்
கருள்பொழி மரபிற் றெருள்சிவக் கன்றென
மண்ணிற் கதிப்புறு வெண்ணெய்ப் பதியில்
வந்தமெய் கண்டான் சந்தா னந்தழைத்
தோங்கிடத் தென்பால் ஊங்கிடு கமலை
ஞானப்ர காசர் மோனத் தருளத்
தருமையில் வந்தருள் குருஞான சம்பந்த
மாபெருங் குரவர் தாபிதம் புரிந்த

அங்கயற் கண்ணி பங்ககலாத
சொக்கப் பெருமான் மிக்குறாங் கருணை
யாறெனை ஒழுகுறும் மாறிலா மரபிடை
அறுநான் காவ துறுமேம் பட்டத்
தமர்ந்தருட் செங்கோல் புரிந்திடு தூயோன்
கண்ணிற் சொல்லிச் செவியிற் காணும்
புண்ணியன்; நுண்மாண் நுழைபுலக் கண்ணியன்
தற்பா லன்றி எப்பா லிருந்துறும்
அருணெறி ஒழுக்கினர் வழுவிலா அடியார்
உள்ளக் குறிப்பினைப் பொள்ளெனத் தெரீஇ
யன்னவர் வேட்கை பின்னுரு வகையிந்
துள்ளம் உவந்தருள் வள்ளல் மாமணி;
மணிமொழிக் குரிசில் அணிமொழி சுவைக்க
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்த
அன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவனை மின்னெழில் உமையைத்
தரும புரத்திருக் கயிலையிற் றன்னிரு
கரங்கொடு பூசனை திருந்தப் புரிந்தருள்
கறைக்கள மறைத்த மறைத்திரு வாளன்
கண்மணி புனையுஞ் சண்முக தேசிக
மோனவின் பந்தரு ஞானசம் பந்த
பரமா சாரியர் விரைசேர் கழலிணைக்
கன்னேன் பெயரால் ஆற்றுப் படையினை,
சிந்திப் பவர்க்குச் செந்தேன் பொழிதரு
மையாற் றுறையும் அறம்வளர் செல்வி

செம்பொற் சோதி உம்பன் முகவன்
பொன்னின் மயிலோன் என்னும் நால்வரை
முட்டா திறைஞ்சும் சிட்ட னாகியோன்
விரிபொழிற் கூடலிற் றெரிதமிழ்க் கிழகத்
திருந்து செந்தமிழ் திருந்தக் கற்றோன்;
முத்தர் தெளியும் சித்தாந்த முணர்வோன்;
இல்லையென் சமயத் திருள்துரத் தெல்லோன்;
கல்லூரி மாணவ நல்லோர்க் கருந்தமிழ்
திறம்படப் புகட்டும் நறும்புகழ் நாவலன்;
செம்பொன் பள்ளிவாழ் செம்மனச் செல்வராய்
இருபெருந் தேவரை உருகி வழுத்தும்
சைவநற் குடிவரு தவநிலைக் கிழவராய்
இராம சாமிப் பெயர்கொள் ஏந்தல்
மாரிமுத் தம்மை மனமகிழ் புதல்வன்;
என்னுழிக் கிழமை துன்னிய உழுவலன்;
**கோவிந்த சாமி** எனும்பெயர் கொண்டோன்;
முத்திறங் கடந்த **முழுமுதற் றிருவுரு**
**ஐயைந்து** கூறி அன்னவன் மானிட
வடிவொடு தருமையில் வந்தனன் குருவென
அக்குரு பரனார் பக்குவ மரபினர்
எவரையும் நிரந்தே அவரவர் மாண்பும்
செய்தருள் நூலும் சித்தியும் புகன்றே
இக்குரு பரனார்க் கியைபுடை யிருபத்
தேழெனு மாலயம் இற்றெனக் கிளந்து
செஞ்சொற் புலவரை அஞ்சொலால் அவற்றைப்

புரிந்து போற்றிடத் திருந்தச் செலுத்தி
மீண்டு தவத்தினர் ஈண்டு தருமை
யம்பதிச் சற்குரு தம்பதஞ் சார்ந்து
விரும்பிய அரும்பொருள் நிரம்பப்
பெற்றுவா ழியரெனப் பெரிதியற் றினனே.

---

௨

சிதம்பரம் செந்தமிழ்ப் போதகாசிரியராகிய,
**திருவாளர், C. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்**
அன்புடன் அளித்தது.

---

**தருமபுரக்** கயிலாய வாதீன
மடாலயத்தின் சந்நி தான
உரிமைபெறு மிருபானுன் குயர்பட்டத்
தினிதமரு மோங்கு சீர்த்தித்
திருவளருஞ் சண்முகத்தே சிகன்மேலாற்
றுப்படைநூல் திருவை யாற்றின்
அரசகல்லூ ரிப்புலவன் கோவிந்த
சாமிநம்பி யாற்றி னனே.

---

அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் திருவாளர்,
**கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L., அவர்கள்.**

---

திருவையாற்று அரசர் கல்லூரி ஆசிரியர், **திருவாளர், கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள்** திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் தற்போதைய உயர்பெருந் தலைவர், **ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிகர் அவர்கள்**மீது இயற்றிய ஆற்றுப்படை என்னும் அழகிய நூல்இறைவன் மானுடச் சட்டை சாத்தி அருட்குருவாய் வந்து மக்களை உய்விக்கும்

உண்மையையும், முருகன் பெருமையையும், தருமபுர ஆதீன ஆசிரிய மரபின் சிறப்பையும், இற்றைய மகாசந்நிதானத்தின் இணையற்ற வண்மையையும், தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் ஆர்வத்தையும் இனிது விளக்கிப் பெரும் பயன் அளிப்பதால் தமிழ் வாணரால் மிகவும் பாராட்டத்தக்கது.

---

உ
சிவமயம்
குருபாதம்

## மகாநாட்டு நினைவுக் குறிப்பு

இவ்வாற்றுப்படை 1941ஆம் ஆகஸ்டுமீ 28, 29, 30, 31-ம் நாட்களிலே தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தால் ஆதி ஸ்ரீ குருஞான சம்பந்தர் ஆலயத்தில் நடத்தப்பெற்ற **ஸ்ரீ மெய்கண்டான் சித்தாந்த மகாநாடும், ஆவணிமூலத் திருமுறைத் திருநாளும்** ஆகிய இந்நிகழ்ச்சிகளை நினைவுறுத்த இயற்றப்பட்டதாகும்.

ஆதி குருமூர்த்தியின் ஆலயத்தின் சந்நிதி வீதியிலே, மடாலய வடக்கு முகப்புக்கு அணித்தாக உள்ள சாந்த நிலையத்தின் கீழ்பால் நிறுவப் பெற்றுள்ள மெய்கண்டான் நிலையமும் அந்நிகழ்ச்சிகளை நினைவுறுத்துவதாகும்.

**மௌன. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்,**
மகாநாட்டின் பொதுக்காரியதரிசி.

உ

சிவமயம்

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன சைவப்பிரசாரகர்,

திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள் அளித்த

# சிறப்புப் பாயிரம்

தாதார் கொன்றைச் சடிலத்தார் தாளே வணங்குந் தகுதியர்க்கு
வாதார் சமயப் பிணக்கறுத்து வளஞ்சார் சைவ நெறிகாட்டித்
தீதார் பிறவித் துயரொழிக்குஞ் செம்மை யொளியின் றினகரனும்
போதார் சோலை புயல்படுக்குங் கமலை ஞானப் பிரகாசன் 1.

வாடா வருளிற் றிளைத்தேறி வயங்கு ஞான சம்பந்தன்
பாடார் குமர குருபரற்குங் குருவா யோங்கு பரம்பரையில்
தோடார் பதிக மவைசாற்றுந் தோணி புரத்தார் தனைமான
வீடார் நெறியின் விதிதேற்றி விழுப்ப மளிக்குங் குணக்குன்றை 2.

பொன்னி யாறு திரைமோதும் பொற்பார் தருமைப் பெரும்பதியை
மின்னி யொளிசெய் விண்ணுலகும் மீளா நாண மவைகொள்வான்
கன்னி யாண்ட சிவபுரம்போல் கவினூர் திறங்கள் பலகாண
மன்னி விளங்கும் பெருமதிலும் மாடம் பலவும் புதிதாக்கி 3.

செந்தா மரைமேற் றிருமகளும் செம்மைப் பொருளாங் கலைமகளு
மெந்தா யகமே யிதுவன்றே வென்று வாழ மியல்புடைத்தாய்
நந்தா மரபின் நூல்நிலையும் நளின வாவி பலவமைத்துச்
சிந்தா மணியா மக்கமொடு திருநீ றிலங்குந் திருவுருவை 4.

விண்ணோர் போற்றும் விமலனுக்கு வேதா கமத்தின் பூசைவிழா
மண்ணோர் காண வியற்றுவிக்கு மருந்தே யனைய தேசிகனை
தண்ணார் கருணை நோக்கருளித் தகவீற் றிருக்குஞ் சண்முகத்தை
கண்ணுற் கண்டாற் புலவீர்காள் கலியின் வலிமை கழன்றிடுமால் 5.

என்னும் பண்பை யெடுத்தோதி யெழில்சே ராற்றுப் படைசெய்தோ
பன்னும் பண்டை யாசிரியர் குணங்கள் பத்தும் மிகமலிந்து [ன்
அன்னம் பயிலும் பொழில்சூழ்ந்த வையாற் றரசர் கல்லூரி
மன்னும் புலவன் மாண்பார்கோ விந்த சாமிப் பெயரோனே. 6.

குருபாதம்

முத்தபிள்ளையார் [illegible]

## காப்பு

### வெண்பா

சீர்தருமை யாதீனச் சிற்குருவாஞ் சண்முகனருள்
ஏர்தருமாற் றுப்படைகொண் டேத்துவதற் — கார்மதிசேர்
செஞ்சடையா னீன்றமுதற் சேயின் றிருவடியென்
னெஞ்சதனிற் காத்தருளு நின்று.

## சொக்கநாதர் துதி

செந்திருவுங் கைகூட்டுந் தெய்வச் சிவநெறியுந்
தந்துநெஞ்சே பந்தம் தவிர்க்குமே — செந்தமிழார்
வான்கூடல் முன்முளைத்து வண்மைத் தருமையுறை
மீனேக்கிச் சொக்கனடி மேவு.

## வாழ்த்து

நந்தி மரபும் நறும்பொழில்வெண் ணெய்மேவும்
எந்தைமெய் கண்டா னெழில்வழியும்—சந்ததமும்
வாழியிந் நீணிலத்தின் வண்மைமிகு சண்முகன்சீர்
வாழியவே யெங்கு மலிந்து.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியர் ஆற்றுப்படை மூலம்

## அகவற்பா

உலக முய்வா னுயர்நிலை வெள்ளியம்
பொருப்பகத் துறையும் பருப்பதி மணாளன்[1]
பிறவா யாக்கைப் பெரியோன் மதிநதி
செஞ்சடை வானவன்[2] நஞ்சடை மிடறன்[3]
அஞ்சக் கரத்த னஞ்சக் கரத்தனை
யொருபா கத்துடை யருவுரு திருவினன்[4]
புண்ணிய வுருவுடைத் திண்ணிய வேற்றினன்[5]
தக்கன்[6] சலந்தரன்[7] சமன்[8]மன் மதன்[9]முதல்
தடிந்தவன் சக்கரஞ் சலநிதி யுறைபவற்
கருளிய வண்ணல்[10] அருச்சுனற் பொருட்டுக்
கானவ வுருக்கோள் மானமர் கரத்தன்[11]
அத்தியி னுரிதனை அழகுறப் போர்த்தவன்[12]
கணபதி[13] முருகனைக்[14] கண்டவன் வண்டமிழ்
மதுரைக் கரசி மகிணன்[15] சேவற்
பதாகையன் பழிச்சும் பழனமார் நல்லூர்ப்

பிள்ளைக் கருளிய வள்ள[16] லிருவர்க்
கடிமுடி யொளித்த வடிவுடை யாளன்[17]
தத்தம் வினையே தத்தமக் குறுமெனும்
புதுக்கொள் கையர்தாம் விதுப்புறச் செயுநன்
னக்கன்[18] பதஞ்சலி புக்கசீர்த் தில்லைப்
பொன்மன் றத்து நன்னடம் புரிவோன்[19]
முப்புர மெரிசெய் யொப்புவ மையிலி[20]
மழுவேன் புடையன்[21] வழுவினல் லிருக்கையன்[2
ஒற்றைக் காலினன்[23] முற்றுணர் முதல்வன்
உமையொரு கூற[24] னெமையாள் பரமன்
மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மல் தென்முகத் தெய்வமே[25] யருட்டிரு
மேனி கொண்டு மேனிலை யாளர்க்
கருளுந் திருவுரு மருளுறு மெனக்கொளீஇக்
கற்பக நாடு மற்பமென் றெண்ணி
யண்ட வாணரு மண்டிடுஞ் சீர்சால்
தருமையம் பதியினின் மருவுறு மானிடப்
படிவம் பொறுத்து முடிசடை யணீஇக்
கல்லாடை யுடீஇக் கண்ணுதல் கரந்தே
அக்கயி லாயத் தக்கநற் பரம்பரைத்
திருத்தளி முதல்வராய்க் குருத்துவ நிலையினைச்
சார்ந்தநற் குரவரு ளார்ந்திரு பானுன்
காவது பட்டத் தமர்ந்து சிட்டருக்

கருள்புரி குருமணி யாயொளிர் திருமணி
அங்கயற் கண்ணி பங்கில்வீற் றிருந்த
செக்கர் வார்சடைச் சொக்க நாயகனை
ஈரெண் டிறத்துப சாரமும் வாய்ப்பப்
பூசனை புரியும் தேசிக ராய
ஆதி ஞானசம் பந்த வண்ணலே
வந்தவ தரித்ததென் றுந்துவ கையொடு
நற்றவர் நாவலர் நாளும் வழுத்துற
அகத்தும் புறத்து மகத்துவ மாகப்
பூசனை புரிந்துறும் புண்ணிய மூர்த்தி
நல்லருள் நாடி நான்முக னிந்திரன்
ஆதியர் பூதி சாதன முடையவர்
தந்நிலை யொரீஇ மெய்ந்நிலை யுறுவான்
வெவ்வே றுருக்கொடு மேவ மேகமேய்
மாளிகை யேல மாண்புற வகுத்தவன்
தவநெறி யாளர் தமக்கு ஞான
நெறியினர் தமக்கு மறிவுரை யருளும்
ஆசான் தேசார் அழகன் எமையாள்
பரம தயாளன் குரவர் தமக்கோர்
குரவனு மிளிர்சிவக் கொழுந்து செந்தமிழ்
வாணர் புலவர் வடமொழி வாணர்
ஆங்கிலம் அருந்தமிழ் பாங்குறப் பயில்பவர்
முதற்பல் லோர்க்கும் மூவுல கறிய
வரையா நிதியருள் வள்ள லன்னோன்
செந்தமிழ் வேந்தனுஞ் செந்திலாண்டவனே

வந்தொரு முகமொடு வயங்கு மெய்ம்மையன்
செப்பருங் குணமுடை யொப்பி லொருவன்
தண்டமிழ் மொழியினைச் சால்புறக் கற்ற
நற்றவப் புலவீர்! பெற்ற மூர்ந்திடு
பெம்மா னெம்மா னிம்மா னிடவடி
வெடுத்த வெங்க ளியலா சிரியர்
தக்கநால் வகைத்தாஞ் சத்திநி பாதந்
தருதற் கிருவினை சாருங் காலம்
உளவாய்ப் பெத்த முறுமல பரிபா
கமும்வரு மளவிற் காலம் பலவாய்
அலமரல் கண்ணுற் றருளி யுலவா
தறிவுக் கறிவா யவ்வறி வுக்கே
யெட்டா நெறியிற் கிட்டிடு நிலையொரீஇப்
பிறியாக் கருணை பெருந்திரு வுருவாய்க்
காசினி யதற்கே கவினுறத் தோன்றிக்
குருபர னென்றோர் திருப்பெயர் கொளீஇக்
கண்மணி யனைய வொண்மணி ஞான
சண்முக நாமத் தனிக்குரு நிமலன்
நீலமா மிடற்றினைச் சாலவுங் கரந்த
மாசிலா மணியெம் மாபெருங் குரவரின்
முன்னா சிரியர் முறைவர லாற்றினை
யென்னா லறிந்தவா றிசைப்பேன் கேண்மோ
ஐயா றதன்மிசை யெட்டுத்தலை யிட்ட
மையில் வான்கலை மெய்யுடன் பொருந்திய
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்துஞ்

சீர்மீக் கூர்ந்த தேசார் தேசிக
மாமணி யாகு மாண்புடை யாளர்
என்பதை முன்னல் உன்னிடு வீர்;பின்
ஒவ்வொன் ருக வுரைப்பதை யோர்மின்;
[1]தென்முகக் கடவுள் திருவாய் மொழியுணர் •
அகச்சந் தான வறிவா சிரியர்
சற்குரு [2]நந்தியஞ் [3]சனற்கு மாரன்
[4]சத்திய ஞான தரிசிநி சீர்ப்[5]பரஞ்
சோதிநால் வருளச் சோதி யாரருள்
புறச்சந் தானம் பொய்கண் டகற்றும்
[6]மெய்கண்ட தேவர் மிக்கவா கமக்கலை
யுண[7]ரரு ணந்தி யுய்[8]மறை ஞான
சம்பந் தன்னரு டகு[9]முமா பதியே
அவ்வுமா பதியி னருள்பெறு மச்சுச்
செட்டியா ரென்னுந் திரு[10]வரு ணமச்சி
வாய தேவன் மலரடி வழுத்திடுங்
காழியில் வந்தருள் [11]கங்கைமெய் கண்டான்
காலிற் [12]பழுதை கட்டிடு சிற்றம்
பலவன் [13]பழுதை கட்டிய ஞானப்
பிரகா சன்னருள் பீடுயர் சிவபுரத்
[14]தத்து வப்பிர காசன் சார்ந்த
திருவா நூரிற் செட்டித் தெருவார்
[15]ஞானப் பிரகாச நம்பிபின் பவ்வூர்
மாசிலா மணிச்சம் பந்த னென்னும்
சிதம்பர நாதனுந் தென்றமிழ்க் [16]கமலை

ஞானப் பிரகாச னற்றவ னற்றாள்
செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுவான்
புனிதசெங் கமலப் பொற்பா தத்தைச்
சிந்தையி லிருத்திச் செல்லினு மிருப்பினும்
ஞானப் பிரகாச ஞானப் பிரகாச
என்னும் பெயரல துன்னுவ தின்றி
நாத்தழும் பேற நவின்று நவின்று
நாளும் போற்றுறு ஞானசம் பந்த
ஆசா னன்றே வாதீனத் துறு
முதற்குரு வாகிய முதற்குரு வாகிய
மூர்த்தியே யாவரம் மூர்த்தியின் நற்குரு
கமலைஞா னப்பிர காசனற் கண்ணுதல்
திருவா ரூரிற் சித்தீச் சரத்துத்
தென்முகக் கடவுள் திருவொரு முகுழ்த்தம்
அருணிலை யுணர்த்த வார்ந்தனன் என்பது
உண்மை யாளர்த மோருமோழி யன்றே
அக்குரு திருவருள் மிக்குடை ஞானசம்
பந்த வள்ளல் நந்தியின் மரபில்
மெய்கண்ட சந்தான மேவிய நிலையால்
சமய குரவர் சந்தான குரவர்
அருளிய தமிழ்மறை யருட்சம யக்கலை
உலகிடை நிலவுற மலவிரு ளகல

ஞானநல் விளைவு நாளுமீக் கூர
வந்தவ தரித்த மாண்பின னவர்;
நல்லபி டேக நன்மர பிடைவரு
கண்ணுத லொளித்த கமலை ஞானப்
பிரகா சன்னவன் பெட்புறு திருவடி
மன்னியே மகிழும் மறையுணர் நிறைமொழி
ஞானசம் பந்த நல்லா சிரியன்
என்றிவ் விருவரு மெழிலோ ருருவாய்
வந்தவ தரித்த மாட்சிமை தன்னால்
அவ்விரு நிலைமை யணுகிய வியல்பால்
அச்சண் முகமணி மெய்ச்சம யம்மணி
மெய்கண்டான் சித்தாந்த மேன்மகா நாடும்
பன்னிரு திருமுறை பாங்கொடு துருவும்
நன்மா நாடும் ஞாலம் புகழ்மார்
கூட்டி யருளிய கொள்கையா மன்றே!
என்றே துருவிநீர் ஏத்திப் புகழ்மின்!
[1]ஞான சம்பந்த னற்றாள் அருளுநீஇ
யொன்றிய நிலையார் பொன்றலில் புகழார்
[2]ஆனந்த பரவச தேசிகர் ஆவர்
அவர்தந் திருவருள் தவநெறி மிக்க
ஞான முறப்பெறு நாயகன் நம்பன்
[3]சச்சி தானந்த தேசிகர் தாமே
சச்சிதா னந்தன் றண்டா மரையடி
யுச்சிமேற் கொண்ட வுயர்[4]மா சிலாமணி
நான்கா வதுநிலை நணுகிய பட்டம்

உற்ற எங்கள் முற்றவப் பெருக்கே
செந்திலம் பதிவாழ் கந்தன் றிருவருள்
முற்றிய குமர குருபர முனிவரர்
வந்தடி பணிந்து மனவிரு ளகல
ஞானம் பெற்றமை நாடுதா னறியுமே
இப்பெரு மைதான் செப்பற் பாற்றே!
மாசிலா மணியின் மாண்பரு ளுற்ற
[5]ஞானசம் பந்த தேசிக னருள்பெறு
வெள்ளி யம்பலப் பேரியோ னீட்டிய
சித்தியார் ஞானா பரண விளக்கமும்
முத்தி நிச்சய முதற்பா டியமும்
சிவப்பிர காசற்குச் செந்தமிழ்த் தேசிக
னாகிய வமைவும் ஐந்தாம் பட்டத்
தமர்ந்த அதிபதி யவர்கள்கா லத்தவே!
ஆறாம் பட்டத் தமர்ந்த சீர்த்திரு
[6]ஞானசம் பந்த னல்லா சான்பால்
அன்பா லடைந்திடும் அருந்தமிழ்க் கந்த
புராணச் சுருக்கம் கவினுறப் புரிந்த
சம்பந்த சரணா லயரும் தமிழா
கரமுனி யருளிய கதித்திடு சந்திர
கலாஅ மாலையும் காசினி யறிய
ஆசௌச தீபிகை அருள்ஞான சம்பந்த
குருராய வட்டகங் குலாவிடச் செய்தமை
மரபினர் எவரும் மயங்கா தறிவார்;
அக்குரு வருளைப் பக்குவ மாப்பெறு

[7]திருவம் பலதே சிகர்தா ளருளுறு
மழகிய [8]திருச்சிற் றம்பல தேசிகர்
[9]திருநாவுக் கரசு தேசிக ரருள
அட்டமா சித்தியும் இட்டபணி புரிய
முதிரா இளையளை முதிர்பெற அருளியும்
செந்தில்யாத் திரையில் வந்திடர் புரிந்த
போற்றிகள் ஊமரா ஆற்றியும் அவரை
மாற்றியும் நன்மை போற்றிடச் செய்தும்
மலைக்கோன் மகளிடைக் கொலைப்பேய் நீக்கியும்
இனைய சித்திகள் கனமுற இயற்றியும்
காசித் துண்டி கண்விரி யம்மை
ஈசர் பூரணி தேசமர் வைரவர்
கேதார ரோடு தாதார் கதிரை
வேலர் வேளூர் வேலவர் சித்தீச்
சரத்துத் தென்முகப் பரத்தின் மீதும்
அருட்பாப் பாடித் தெருட்கலை வளர்த்தும்
ஞானக் குழலி மீனக் கண்ணி
பாகத் தமரும் ஏகனுஞ் சொக்க
லிங்கப் பரமன் தங்கிடத் தருமையில்
ஆன்மார்த்த பூசைக் கான மடாலயம்
அன்பாற் கட்டிய வின்பார் பத்தாங்
குரவர் [10]சிவஞான குருபர னாகுவர்
இக்குரு மூர்த்திதாள் நெக்கு நெக்குற
வழுத்தி வரம்பெறு மாண்புசிவா னந்த
முனிவரர் கண்டவை முத்திநிலை முப்பா

னவசர மென்னு மருநா ளுடனே
சம்பிர தாய தீபஞ் சாத்திரத்
தொகுதியாஞ் சித்தாந்த நிச்சயம் தாய
நூல்பல வாகும் நூல்பல வாகும்;
அச்சிவ ஞான தேசிக னருள்பெறு
[11]சச்சிதா னந்த சற்குரு தேசிகர்
அவரடி புனையும் அருளுறு [12]முத்துக்
குமார தேசிகர் குலாவுநல் [13]ஞான
சம்பந்த தேசிகர் சரண்புனை [14]கந்தப்ப
தேசிகர் சீர்[15]மாசி லாமணி தேசிகர்
[16]சச்சிதா னந்த தேசிகர் தாள்புனை
[17]மாணிக்க வாசக தேசிகர் மாண்பார்
சீர்[18]சிவ ஞான தேசிகர் அருள்பெறு
[19]மாணிக்க வாசக தேசிகர் மாணருள்
முற்ற வுற்ற மூர்த்தி [20]சிவஞான
தேசிகர் [21] சச்சி தானந்த தேசிகர்
இவரருள் பெற்ற எழின்[22]மணி வாசக
தேசிக ரன்றே! தேசிக ரன்றே!
இவர்பின் குரவராய் எழுந்தருள் எங்கள்
[23]சுப்பிர மணியத் தூயநற் குரவர்
பீடத் தமர்ந்த பீடினு லன்றே
ஆதீ னந்தனில் ஆகம நிலயம்
அமைத்தருள் செய்தா ருருங்கலை பொலிய
இச்சுப் பிரமணி யக்குரு வெழிலருள்
தங்கிய எங்கள் துங்கநற் [24]சண்முகத்

தேசிக குருமணி சீரடி பராவித்
திருவினைப் பெறவும் இருவினை யொருவத்
திருவருள் பெறவும் தெருளுறு முளத்தொடு
முன்னிடு வீரே லின்னே பெறுகுதிர்;
முத்தமிழ் முதல புத்தகம் பலவுணர்
நாவன் மையொடும் பாவன் மைமிகும்
புலவ ரேறே! புலவ ரேறே!
உலகிய லின்ப முடலுயி ரின்பமென்
றிருவகைத் தாக விசைப்பதை யறிவீர்
அவ்விரு நலனு மெவ்வ மின்றி
நுகர்வான் வேண்டின் பவர்வதைக் கேண்மின்!
அன்னவ னடிமல ரகத்தினி லமர்த்திய
செந்தமி ழறிஞனுஞ் சிறியேன் கூறிடும்
மெய்ம்மொழி கேண்மோ மெய்ம்மொழி கேண்மோ!
நல்லிரு பத்து நான்கா வதுபதி
யுண்முக மாவொளிர் சண்முக மாமணி;
இறைவனை யகத்தில் எழிலுறக் காணலாம்
புறத்தினிற் காணப் புலப்படா தன்றே!
இருதிறத் தியல்பாய் எளிதினிற் காண்குற
வந்தவ தரித்த மாசிலா மணியார்
ஞானசம் பந்த பண்டார சந்நிதி
யென்றெணுந் திருவார் இயல்பமை தேசிகர்
சமய சாத்திரத் தக்கநன் னூல்களை
யச்சிற் பதிப்பித் திச்சித் தோர்தமக்
கிலவச மாக இயுமா றுணை

அளித்த தனிமுதல் அன்புடை யடியராம்
முனிவரர் தமக்கு முனிவுத லின்றி
யருளுரை பொருள்பல வருளுநல் லேந்தல்;
உலகிய லறிவோ டுயர்குணம் பிறவும்
மீக்கூர் பெரியன்; மேன்மையை யெஞ்சிறு
நாவா லளந்து நவிலவொண் ணாதே
ஆயினும் அறிந்தவா வறைகுவ னமைவுடன்
கேட்கும் வேட்கை கிளர்ந்திடு வீரே!
தென்றிசைச் செங்கோல் செலுத்துந் தேசார்
தரும ராசன் பெருமிதத் துடனே
நேச மார்ந்தே பூசனை யாற்றி
மாசு கழீஇத் தேசமர் சிவப்பே
றெய்திய சிறப்பா ருய்திற னுரைத்தருள்
தருமபு ரம்பதி ஒருமையொ டும்புரி
தவத்தினர் வாழுந் தகுதியு முடைத்தால்;
இத்திருக் கோயி லியைந்திடுங் கீழ்பால்;
மேல்பா லெந்தவச் சால்பமர் சற்குரு
ஞானசம் பந்த ஞான தேசிகர்
அருளுருக் கோயி றெருளுற வமைவதே;
இத்தளித் தென்கீழ் பாலே இலகிடும்
ஒப்புவ மையிலா ஒருமணி குருமணி
திருமணி யொளிரும் திருமடா லயமே
அன்னதன் பெற்றியும் பன்னுவன் ஆய்மின்!
சரோருக வோடைக டழைப்புறும் பொழில்கள்
நாற்பாற் சூழ்வுறும் மேற்பா லுடைத்தாய்

வடபாற் பொன்னி மருங்கினை யெய்ந்து
ஆய்வார் பதிபசு பாசம் தோய்வார்
நின்மலன் சேவடி முன்னிய வினைகளைச்
சிந்தித் தென்றும் வந்தனை புரிபவர்
ஆகமக் கலைகளை யோகநல் லகத்தினில்
நாளும் பயில்வுறு நற்கலை வாணர்கள்
செந்தமிழ் மறையினைச் சீருறப் பொருளுறப்
பாடி யுணரும் பாங்கினர் இடில்
தமிழ்மொழி யிலக்கண விலக்கியங் கற்போர்
சொற்பொழி வாற்றுறுந் தூயநல் லொழுக்கினர்
சீற்றமி லறிஞர் ஏற்றமீக் கூர்ந்த
பாடிய முணரும் பன்மொழி முனிவரர்
விண்ணிடைப் புலவர்கள் மண்ணிடை வந்து
நாற்பொருள் கேட்ப நானில மாந்தராய்
வெவ்வே றுருக்கொடு மேவிய நிலையினர்
மன்னிய வகைத்தாய் மாண்பார் நிலைத்தாய்
மாக வரையுறு மேகந் தவழ்வுறு
மாளிகை பலவும் வயங்குநற் பதியாம்;
அப்பெரும் பதியிற் செப்பரு நிலைத்தாய்
பொற்குன் றம்மெனப் பொலிவுறு மரண்மனை
நாப்ப ணிடத்து நலப்பாட் டுடனே
மிளிரு மத்தாணி மேவிநல் லிருக்கையின்
ஞானச் செங்கோ னன்கினி தோச்சுறும்
அற்புத மூர்த்தி சிற்பர வடிவினன்
அறிவரி யிருக்கையி லந்த ணாளராய்

அன்றலர் தாமரை யழகுறு முகமொடு
நின்றருள் புரிபவன் நியமமு முளதால்;
ஊனுயிர் ஒன்றுற வுருகிய காதல்
மீக்கூர் அடியவர் மேவிய நிலையினை
உடையதா மதனை யடைவுடன் நேடிச்
சென்றுற வேண்டிடின் நன்றுறக் கேண்மின்;
சீர்விசு வாண்டினி லேரரி மதிதனில்
மூலத்தன்று சீலத் தோர்கள்
பல்லா யிரக்கணக் கொல்குறக் குழுமிச்
சமய சாத்திரத் தக்கநற் பொருளை
யாகமப் பயனை யமைவுறக் கேட்டு
மேனிலை யுறுவான் நானிலை யாளரும்
நயத்தகு தொண்டினை வியத்தக வாற்றச்
சீர்மெய் கண்டான் சித்தாந் தம்மகா
நாட்டினை நாட்டவர் நலமுறப் போற்றிடக்
கூட்டியே நான்கு குலாவுறு நாட்கள்
செய்தநற் சிறப்பினைச் செப்பற் பாற்றோ!
திருமுறைத் திருநாள் பெருமிதத் துடன்பல
புலவர் சொற்பொழி வலகில வாக
ஆற்றிய சிறப்பினை யறியா ரியாரே!
உண்டியு முடையும் உறையுளும் பொன்னும்
மாரிபோல் வழங்குற மாபெரும் புலவர்கள்
பெற்றே மகிழ்ந்தனர் உற்றறி யாத
பேறில் புலவீர் வீறுடன் பெறுவீர்;
இன்னே சென்மின்! இன்னே சென்மின்!

எங்கணல் லாசான் எழிலடி மறவா
வெண்ண முனைந்து நண்ணுவீ ராயின்
எண்ணிய வெண்ணியாங் கெய்தப் பெறுதல்
திண்ண மெனவே செப்புவன் மிகையிலை!
ஒருமதி தனக்கோ ரொன்பான் மூன்றாய்
எண்ணுநன் னாட்க ளியைந்தன வெனலைச்
சோதிடப் புலவர்கண் மாதிட மாகக்
கூறலை யேவர் கொள்ளா ருலகினில்
அந்நிலை யனைய மெய்ந்நிலை யெங்கள்
ஆரிய னாளும் ஆரிய வாலயம்
இருபத் தேழெனு மெண்ணினை யிகவா
அவ்வொரு மதிக்கலை யெவ்வ மின்றாய்
ஆறிரு படையினு மணுகிநற் கலைகளை
மாறிலா தென்றும் வழங்குதல் பொருவ
அருட்கலை யாகிய தெருட்கலை நாளும்
எங்க ணற்குரவ ரியற்கை யாகவே
வழங்கி வாழும் வழக்கினை மதியார்
யாவ ரேயோ! யாவ ரேயோ!
ஒருமொழி கொண்டே யுலகமுழு தாளும்
திருவளர் செல்வத் தேசிக ரன்றே!
இம்மை மறுமை அம்மை யாய
மும்மை நலனு முற்ற வேட்குறு
முதுமொழிப் புலவீர்! கதுமென வுரைப்பல்;
அங்ஙன முரைப்பதைத் துங்கநல் லுளத்தினில்
வைத்து நெறிக்கொள வகையுறக் கேண்மின்!

அவ்விரு பத்தொடு மமைந்த வேழெனுந்
தேவகோட் டத்தைத் திப்பிய மாக
வாட்சி புரியு மாட்சித் தாகிய
வாலய நிலையினை யாலய மெனவே
கண்கா ணிக்குங் காறுபா றலுவல்
இருதிற நிலையருண் மருவுறப் புரிபவர்
தம்மை யறிந்தே செம்மனத் தினராய்
ஆக்கி யவர்களை யமையுநற் றொண்டினை
நன்றுற நாளு நயப்புற நடாத்திடு
மாலய மொன்றொன் றுகவாய்ந் தினிதா
வுரைப்ப னவற்றினை யுவப்புட னோர்மின்!
சோழநன் னாட்டினைச் சோறுடைத் தென்றும்
ஆயிரம் விளையுட் டாகக் காவிரி
புரக்கும் வேலி நிரக்குவ தென்றும்
உரைத்தவப் புலவர் நரைத்த சொற்களைநீர்
உளங்கொள் ளற்க வுளங்கொள் ளற்க.
என்ன மேன்மைதா னிந்நாட் டுக்கெனின்
மருக்கிளர் சோலைத் திருக்கயி லாய
பரம்பரை வந்த நிரம்புறு தவமுடை
ஞானநற் றேசிகர் நயப்புறு திருத்தளி
பற்பல வாமால் பற்பல வாமால்;
அரனமர் ஆலயம் அரியமர் ஆலயம்
அலகில வாகும் அலகில வாகும்
சோழநன் னாடே சோக்கலிங் கத்தின்
ஆலய மாக வமைந்தமை யாய்க;

வலஞ்சுழி சாமி மலைசிற் றம்பலம்
காழிவெண் காடு கமலையா லங்குடி
திருவாப் பாடி தேசின் கோயில்
இடைமரு தாக வியைந்தபெற் றிமையால்
பிள்ளையார் முருகன் பெருந்திருக் கூத்தன்
வடுகன் வீரன் வயங்குதியா கேசன்
தென்முகக் கடவுள் தேசமர் சண்டி
சூரியன் முதலோர் தொண்டினர் சூழ
அம்மை யப்பர் அமைந்தநல் லமைவால்
சமயா சாரிய சற்குரு தவமுதல்
சமய சாத்திரந் தண்டமிழ் சார்புயிர்
தழைப்புற விழிப்புற இழிப்பற உழைத்தே
ஆக்கிய தமிழ்மறை யாக்கிய பொல்லாப்
பிள்ளையார் காட்டிப் பேணுற வைத்ததால்
அக்குர வர்தா நக்கணி னற்றருள்
நணுகிய நகர்க ளணுகிய நிலையால்
இன்னோ ரன்ன வியைபுபல வுடைத்தாய்
இலங்கலைக் கொள்க! இலங்கலைக் கொள்க!
அம்மூ வோன்பா னுலைய மனைத்தும்
திருமறை மருவிய சிறப்புறு நகர்கடாம்;
அவற்றினை யடைவா வறைகுவ னுய்மின்!
கவுணியர் கோமான் கண்ணுத லருளான்
அம்மை யுதவிய கொம்மைநன் முலைப்பால்
ஞானங் குழைத்த போனக மாக
வுண்டுவண் டமிழ்மறை யுலகின ருய்ய

வுமிழ்ந்த வெங்க ளமிழ்தவா சிரியர்
வந்தவ தரித்த முந்திய தலந்தான்
காழிய னுதியோர் கண்டு தொழுதலாற்
காழி முதற்பன் னிருபெயர் கவினும்
குருபத்தி யாதிய குலாவிட மூவுரு
வமைந்த வழகினை யணைந்ததா மன்றே!
திருநிலை நாயகி தேவி திருப்பெயர்
தோணி யப்பன் தொல்பிரம புரீசன்
சட்டை யப்பன் தந்தையின் பெயர்களாம்
அத்திருக் கோயிலின் அழகினைக் காண்குதிர்!
கொள்ளிட நதியின் குலாவுதென் கரையினில்
ஆச்சா மரஞ்சூழ் அமைவுடை மையினால்
[7]ஆச்சா புரமெனு மருந்திருப் பெயர்பூண்
நல்லூர்ப் பெருமண மொல்லையிற் சென்று
ஞானசம் பந்த நாவலர் பெருமான்
சோதியிற் கலந்த தூய நன்னிலையினை
சிவலோகத் தியாகர் தேவியார் நங்கை
யுமையம் மையினை யொன்றியே நினைமின்!
[3]தென்றிரு முல்லை சீகா ழிக்குக்
கீழ்பா லுள்ளது கேடிலி யீசன்
நெய்த னிலத்தி னியம மாமே;
யாண்டுறை யாண்டவ னமைவுறும் பெயர்தான்
முல்லைவன நாதர் முகிழ்கோதை யம்மை
யம்மை நாமமாம். ஆரணம் புள்வேள்
இச்சித் தருச்சனை எழிலுற வாற்றுறும்

சீர்ப்புள் [4]ளிருக்கு வேளூர் தீர்த்தம்
சித்தா மிருதம் தேவன் வயித்திய
நாதன் தையல் நாயகி முத்திக்
கொருவித் தாகிய உம்பர்சே னாபதி
முத்துக் குமர னாகிய மூவரை
அடைந்துநீ ராடி யருச்சனை யாற்றுமின்.
[5]திருக்கருப் பறியலூர்த் திருத்தல மிஞ்ஞான்று
தலைஞாயி றெனவே தரணிசாற் றிடுமால்.
கொகுடிக் கோயில் குலாவி நிலாவுறும்
கோல்வளை யம்மை குற்றம் பொறுத்த
நாதனூர் சேவடி நன்றுறக் காண்க.
நீடூர் மேல்பால் நிமலனா ருறைநற்
கடுக்காய் மரமார் கவினார் கோயில்
காமனை வென்ற வாமன் [6]குறுக்கை
வீரட் டத்தினை மேவியாண் டுறையும்
வீரட் டேசரை மேவுஞா னம்பிகை
தன்னொடு சம்பு விநோத சபைதனில்
நோக்கி யமைவுடன் பாக்கியம் பெறுமின்.
தண்பணை சூழ்வுறுந் தண்டமிழ் மணக்குங்
[7]கடவூர்வீ ரட்டம் கவினுறக் காண்மின்
மார்க்கண் டற்கா மயிடவூர் தியனைக்
காலாற் றாக்கிய கால காலனை
அமிர்த கடேசனை யபிராம வல்லியை
அபிரா மற்கருள் அருளிய வாபோல்
அளித்திட வேண்டிக் களிப்புறச் சென்மின்.

அம்மை மயிலாய் அணைந்தருச் சித்த
[8]மயிலா டுதுறை மருவுமா யூர
நாதன் குமரன் நாயகி யபயாம்
பிகையின் றாளைப் பேணி வழுத்துமின்.
தமிழ்முனிக் குயர்சிவ ஞான தானமும்
ஈசன் சாபவி மோசனஞ் செய்வான்
தண்டுறை காவிரி தன்னிற் படிந்து
பொன்னிநீர் மலரொடு பூசனை புரிந்த
அறப்பெரு வடிவத் திறற்கதி விடைக்குத்
திருவருள் புரிந்தே மருவி லத்துறையினுக்
கிடப தீர்த்த மெனப்பெயர் நிறுத்தியும்,
தன்னிற் றோய்குநர் தவிர்ந்த தீவினை
யனைத்தினுக் கஞ்சி அண்ணலை யொரீஇய
கங்கை ஆளுமா றங்கருள் வேண்ட
அன்னவன் உத்தர மாயூ ரந்தனில்
வருகா விரிபடி தருவா யெனஅவள்
அவ்வண மைப்பசிச் செவ்வணப் பொன்னி
படிந்து தென்முக வள்ளலார் பாகத்
தடைந்திட அருளும் மடந்தை ஞானத்
தம்மைபங் ககலாச் செம்மேனி அத்தர்
ஆலமர் [9]வள்ளலார் கோயில் அணுகி
கமலையில் உறைமறை கற்பான் தேவ
சன்மன் ஒருதினம் தன்யாத் திரையிற்
கங்கைசூழ் கிடந்த காசிக் கணித்தாம்
விமலனு லயத்தே விளங்கு சிவகதை

யுரைக்கும் அடியரை உவர்த்தே நிந்தைசெய்
தமையா விழந்த அமைவுகொள் கண்ணொளி
நீங்கி அருள்பெற நிமலன் மொழிந்தவா
நீங்கித் தென்றிசை ஓங்குசீர்ப் பொன்னி
அந்நா ளுத்தர வாகினி யாகலின்
மேல்கரை யிலகு சால்புமா யூரத்
திருத்தளிக் கருகே விருப்புடன் துண்டி
விநாயகர் வைரவர் தனதுபுடை சூழப்
பெருந்தடங் கண்ணி மருங்குறை ஞாலத்
திறைவன் காட்சி ஈகுவ னென்ன
ஆங்கவன் அவ்வணம் நியதிகள் முடித்துப்
புரிந்த பூசனைக் கிரங்கி யருளிய
[10]விசுவ நாதர் கோயிலை, [11]விளநகர்
வித்தகன் வேயுறு தோளியம் மையொடு
துறைகாட்டு வள்ளலார் தாயநற் சேவடி
பரவிக் காண்மின்! பரவிக் காண்மின்!
[12]மணக்குடி மருவிய மானமர் கரத்தன்
சுந்தரே சன்னொடு சுந்தர நாயகி
யம்மையை யநுதினம் அருச்சனை புரிமின்.
கருங்குட் டத்தினைக் கட்டழித் திட்ட
[13]கருங்குயி னுதன் பேட்டைக் கண்ணுதல்
சத்திபு ரீசனை சத்தியா னந்த
வல்லி யம்மையை வழிபா டாற்றுமின்.
செந்தா மரைமகள் நந்தாப் பூசனை
ஏற்றருள் புரிந்த ஈசருல கம்மைவாழ்

[14]சீர்வளர் செல்வத் திருநின்றி யூரும்
திருநீல கண்ட சீரியாழ்ப் பாணர்
மருவு[15]திருத்தரும புரமியாழ் மூரி
நாதர்தே னமிருத வல்லியை நாளும்
கோளறுத் திடுவான் குறிக்கொள வழுத்துதிர்.
மருத வளமார் மாமன் [16]பறியல்
வீரட் டத்துறை வீரபத் திரரை
வீரட் டேசரை மேவிய விளங்கொடி
யம்மையை யன்புடன் அகத்தினிற் காண்பான்
உருகு காத லுடனே மருவுக.
பொய்ச்சமண் போக்கிய பச்சைப் பதிகம்
பெற்ற[17]நள் ளாறனை, யுற்ற சத்த
விடங்கத் தலத்தினு ளடங்கிய வள்ளலை
போக மார்த்த பூண்முலை யம்மையை
உன்னுக வுளத்தினில். மன்னு[18]பே ரளத்தின்
பவத்தினை யொறுக்கும் பவானி யம்மையொடு
சுயம்பு லிங்க சுயம்பிர காசமாய்
எழுந்தருள் புரியும் எம்பிரான் சேவடி
காண்பான் எழுமின் காண்பா னெழுமின்.
சீர்த்திரு [19]வாரூர்த் தியாகே சன்னமர்
கோயில் புடைசூழ் கோயில்பூங் கோயில்
வன்மீக நாதன் மகிழ்மிகு வல்லியங்
கோதை யம்மையின் கோகன கப்பதம்
முந்துறக் காண்மின் முந்துறக் காண்மின்.
மூவுல காண்ட முசுகுந் தப்பெயர்

பூண்ட மன்னன் பூசனைக் காக
வைத்த நிதிகளை வழாதே யாற்றுறும்
சிறப்பினைச் சென்று சேவை செய்மின்.
குண்டை யூர்க்கிழாஅர் மண்டிய நெற்களைத்
தாளாண் மையொடும் ஆளிட வேண்டிய
ஆரூர் நம்பிக் கருளினைப் புரிந்திடு
[20]கோளிலி நாதர் கோலவண் டமர்பூங்
குழலம் மையி னழகார் சேவடிப்
பற்றுற வழுத்துறப் படர்குதிர் [21]திருத்தி
யெனும்பேர் துதைந்த இன்புரு தூய
தலத்தினி லுறையுந் தகும்வே தேசுரர்
முகிழாம் பிகையின் முளரியம் பதமலர்
முன்னிப் புகழ்மின். முப்புர மெரிசெய்
[22]திரிபுவ னத்துறை திப்பிய மூர்த்தியைக்
கம்ப கரேசரை வெம்பவப் பிறவி
நில்லா தோட வொல்லெனப் போற்றி
[23]இடைமரு தூரி லெழின்மகா லிங்கப்
பெருநல மாமுலை நாயகி பெருமை
செப்பி வழுத்தித் திருக்கோ யில்வலம்
வந்து மகிழ்மின் வரகுண பத்திர
கிரியரைக் கேண்மின். புரிமின் போற்றுதல்.
குமர குருபரர் கொள்கையின் வழாதே
கல்விக் கிலக்காங் கவினுறு மடாலயம்
உடையநற் [24]பனசை உழுவலன் புடைய
தாடகை வழிபடு தாடகேச் சுரரை

கலயர் கட்டிக் கவினுற நிமிர்த்திய
சடையப் பருடன் தான்மகிழ் பெரிய
நாயகி நளின நற்றாள் நாடுமின்.
சேவந்தி புரமென் [25]திரிசிராப் பள்ளித்
தாயுமா னவரை தையல் மட்டுவார்
குழலம் மையடி யழகுற வழுத்துமின்.
உய்யக் கொண்டான் உறுபெயர் [26]கற்குடி
கரன்பூ சித்த கண்ணுதற் பரன்பேர்
உச்சீவ னேச னுயரஞ்ச நாட்சி
அம்மையின் சேவடி செம்மையாப் புகழ்மின்.
நால்வரும் பராவிய நாயகன் நம்பன்
கயிலைக் காட்சி காட்டிய கண்ணுதல்
மெய்யாறு படீஇய [27]வையா றுறைந்து
திருக்கயி லாய பரம்பரைத் தேசிகன்
நந்தியெம் பெருமான் சேந்திரு வடிகளை
முந்துறக் காண்மின் நந்தி மரபாம்
நந்திருத் தளியேனல் நானில மறியுமே!
எல்லா வுலகமு மாகிய வீசன்
காவிரி வழுத்துறுங் காவிரி கோட்ட
மேவிய விமலன் வித்தகச் சித்துரு
வாகிய வப்பன் ஐயா றனைத் தினம்
வழிபடு பவர்க்கே மாண்பரு ளளித்தலை
அன்னவ னைத்தினம் அன்புடன் பூசனை
புரிபவ ரறிவார் புரிபவ ரறிவார்;
தண்ணருள் தரும சம்வர்த் தனியோ

டமர்ந்தருள் புரியும் அப்பனை ஆட்கொண்
டேசனை கயிலை யீசனை சந்திர
சேகர மூர்த்தியை திருவில் லொடும்வளர்
வள்ளிதெய் வானை மகிணனை பழநி
யாண்ட வனைநன் னந்தி காண்டகு
மணாளனை மகிழ்ந்தவர் மலரடி வாழ்த்துக.
ஒவ்வொரு தலத்தின் உண்மைப் புராணமும்
உண்டா லம்ம கொண்டறிந் துணர்மின்.
இத்திருத் தலங்க ளெங்கணல் வாழ்விற்
குறுதுணை யாளன் உயர்தவப் பெருக்கன்
மாசிலா மணியா யாசிகள் சொற்றிடும்
அருட்குரு வின்னருள் அன்புடன் புகழ்ந்துநீர்
அணைந்தாண் டாண்டே யகமகிழ் வாகக்
கண்டநற் காட்சியைக் கொண்டு கூறுமின்.
அன்பே யுருவாய் இன்பமர் குருவின்
அடித்தொழும் பினர்தாம் அன்புரை யனைஇய
மொழிகளைப் புகன்று முதல்வரைக் காண்பான்
கொண்டுய்ப் பார்காண் கொண்டுய்ப் பார்காண்.
அண்ட வானவரும் அணுகற் கரிய
திருவுருக் கொண்ட வருளுறு மண்ணல்
முகமலர் வுடனே முகமன் மொழிந்து
பண்டே கண்ட பான்மையன் போலப்
பழகியே நலங்களைப் பண்புடன் வினவி
முப்பொரு ளியலைச் செப்பமா வருளத்
தீக்கை புரிந்தே யாக்கமீக் கூற

நற்செயல் புரிந்து நானிலம் வாழ்ந்துற
ஞானத் திருவுரு நயப்புட னல்குவன்
பெருநிதி யுதவுவன் பெருமகிழ் வுடனே
அன்னேன் சேவடி பொன்னே போலக்
கண்டு வாழ்குவம் விண்டிட வரிய
ஞான மெய்தி நயப்புற வாழ்வான்
ஆங்கிலம் அருந்தமி ழருமறை யாய்ந்தே
பாங்கொடு மொழுகும் பண்புமீக் கூர்ந்த
அருணந்தி யென்னு மருந்தவ முனிவரும்
சமயக் கலைகளும் சாத்திரக் கலைகளும்
உலகினர்க் காய உறுபெரு நூல்களும்
வடமொழி யாகம திடமுறு குறிகளும்
ஆங்கில முதலுணர் துங்கமார் மவுன
சோமசுந் தரனெனுந் தூயநன் முனிவரும்
கடவூர்ச் சீர்த்திருக் கோயிற் கட்டளை
பைந்தமிழ்ச் சுவைதேர் நந்தலி விராம
லிங்க முனிவருந் துங்கமா மயிலோன்
போற்றிடு வேளூர் ஆற்றிடு கட்டளை
திறம்பட நடத்தும் அறம்பயில் சோம
சுந்தர முனிவரும் செந்தமிழ் நூலின்
நுணுக்க வுரைபயில் அணுக்கத் தவராம்
சிவகுரு நாதச் செம்மன முனிவரும்
முழுநீறு பூசிய முனிவரர் முதலா
ஏனைய முனிவரர் எண்ணில் குழாமும்
பெருநிதி யாளர் பெருகிய திரளும்

தாரகா கணமெனத் தற்புடை சூழ்தரப்
பூரண மதியெனப் பொலிவுடன் மிளிரும்
சண்முக தேசிக ஞான சம்பந்த
பண்டார சந்நிதி பண்புறு சரணமென்
றுண்முகத் துன்னி யோண்மணி சரண
மலர்தணைப் போற்றிட மாபெரும் புலவீர்
மகிழ்ந்து வம்மினே மகிழ்ந்து வம்மினே
இருநிலத் தினிதாய் மருவுறும் பயனே
என்றே யேத்தி யினிதமர் வேனே.

திணை—பாடாண்டிணை. துறை—புலவராற்றுப் படை.

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிகர் திருவடி வாழ்க.

# ஆற்றுப்படையின் குறிப்புரை

பக்கம்.

1 உலகம்—என்பது ஈண்டுயிர்களே. உயர்நிலை வெள்ளியம் பொருப்பு-கயிலைமலை 1 பருப்பதி-பார்வதியின் மரூஉ (பருப்பதி மணளன் முதலாக உள்ள 25-ம் சிவபிரானுடைய இருபத்தைந்து வடிவங்களை குறிப்பன.) பிறவாயாக்கைப் பெரியோன்—சிவபெருமான் 2 மதிநதி செஞ்சடை வானவன்-சந்திரசேகரன், கங்காதரர். 3 நஞ்சு அடைமிடறன்-நீலகண்டர். அஞ்சு அக்கரத்தன்-திருவைந்தெழுத்தினன் அம் சக்கரத்தன்—சுதர்சனமெனும் சக்கரப்படையுடையதிருமால். 4 அரியர்த்தர். 5 இடபாரூடர். 6 வீரபத்திரர். 7 சலந்தராரி. 8 காமாரி. 9 காலாரி. 10 சக்கரப்பிரதர். 11 கிராதர். 12 மாதங்காரி. 13 கசமுகாநுக்கிரகர். 14 சோமாஸ்கந்தர். 15 கலியாணசுந்தரர்

2 16 சண்டேசாநுக்கிரகர். 17 இலிங்கோற்பவர். 18 பிட்சாடனர். 19 சபாபதி. 20 திரிபுராரி. 21 கங்காளர். 22 சுகாசனர். 23 ஏகபாதர். 24 அர்த்தநாரீசுரர். மும்மலம்-ஆணவம், கன்மம், மாயை. கைம்மலர்க்காட்சி—சின் முத்திரை. தென்முகக்கடவுள்-பரமகுருவாகிய 25 தட்சிணமூர்த்தி. இவ் இருபத்தைந்தும் இறைவனுடைய மூர்த்தங்களாம். நிலையாளர்-ஞானநிலையினர், தவநெறிச் செல்வர். மருளுறும்—மயங்குதல் செய்யும். கொளிஇ—கொண்டு. கற்பகநாடு—

பக்கம்.

சுவர்க்கலோகம். அற்பம்—இலேசு. அண்ட வாணர் — தேவர்கள். தருமை — தருமபுரம். மானிடப் படிவம்—மக்கள் உருவம் (மனித உருவம்). முடிசடை—சடைமுடி எனமாறுக. கல்ஆடை—காவி தோய்த்த ஆடை கண் நுதல் —(நுதல் கண்)— நெற்றிக்கண். அக் கயிலாயம்—என்பது, தென்முகப்பரமாசாரியர் நால்வர்க்கருளிய கயிலாயபரம்பரை யெனலைச் சுட்டிற்று. தளி—மடாலயம். குருத்துவம்— ஆசிரியத்தன்மை. சிட்டர்—தூயவர்.

3 ஈரெட்டுபசாரம் சோடசோபசாரம்.(நிகண்டிற் காண்க.)அவதாரம்—அருள்சுரக்க இறங்குதல். பூதி சாதனம்—விபூதி உருத்திராக்கம் ஐந்தக்கரம். தம்நிலை—தேவவடிவொடுற்றநிலை. மெய்ந்நிலை—அழியாமரபு. தேவர்களும் முத்தி வேண்டின் மண்ணிடை வந்துதான் தோன்று தல்வேண்டும் என்பது சாத்திரக் கொள்கை.

தவநெறி—சரியை கிரியை யோகநெறி. ஞானநெறி — சன்மார்க்கநெறி. புண்ணிய மூர்த்தி மாண்புறவகுத்தவன் ஆசான், தேசார் அழகன், எமையாள் பரமதயாளன், சிவக் கொழுந்து வள்ளல், மெய்மையன், ஒப்பிலொரு வன், மாசிலாமணி, ஒண்மணி, ஞானசண்முக நாமத்தனிக்குரு நிமலன் என்பன பாட்டுடைத் தலைவர் திருப்பெயர்களாம். செந்தமிழ் வேந் தன் - முருகன். வரையாநிதி — எல்லையில் பொருள்.

பக்கம்.

4 இயல் ஆசிரியர்-குருவிலக்கணமமைந்த ஆசிரியர் 72 முதல் 81 அடிவரை, கந்தர் கலிவெண்பாவின் அடிக்கருத்துக்களாம். தம் முதல் குரு-[1] பசுபதியாகிய ஞானதேசிகர். அகச் சந்தானுசிரியர் நால்வர். [2] நந்தியெம் பெருமான், [3] சனற்குமாரர், [4] சத்தியஞான தரிசினி, [5] பரஞ்சோதியார் என்பர் ஆவர்.

புறச்சந்தானுசிரியர்— [6] மெய்கண்ட தேவர், [7] அருணந்தி சிவம், [8] மறைஞானசம்பந்தர், [9] உமாபதிசிவம் என்போர் ஆவர்.

5 [10] மச்சுச் செட்டியார் என்பவர் அருணமச்சிவாயதேவர். [11] காழிக்கங்கை மெய்கண்டார். (காலிற் பழுதை கட்டிக் கொண்டிருப்பார் ஆகலின்) [12] பழுதை கட்டிய சிற்றம்பலவர். [13] பழுதைகட்டிய ஞானப்பிரகாசர். [14] சிவபுரத் துறை தத்துவப்பிரகாசர். [15] திருவாரூர்ச்செட்டித் தெரு ஞானப்பிரகாசர். மாசிலாமணிதேசிகராகிய சிதம்பரநாத தேசிகர். [16] கமலை ஞானப் பிரகாசர். (இவர் மழுவாடிப் புராணம் பாடியவர் என்பர்).

6 சிதம்பரநாதன், மாசிலாமணி என்பன கமலை ஞானப்பிரகாசருக்குப் புனைபெயர் என்று கூறுதலுமுண்டு. ஞானசம்பந்த ஆசான்—ஆதீனத்து **ஆதி** குரவராகிய **ஞான சம்பந்த பண்டாரசந்நிதிகள்** ஆவர். ஞான

பக்கம்.

6 சம்பந்தர் அபிடேக மரபில்வரு கமலை ஞானப் பிரகாசர் இவ்விரு திருக்குரவர்களே நம் ஆதீன **சண்முக தேசிக ஞானசம்பந்த பண்டார சந்நிதி** யெனலை 145. 150. வரையிலுமுள்ள அடிகள் உணர்த்தும். மலஇருள்—அறியாமை.

7 ஞானவிளைவு-சிவபோகம். புகழ்மார்-புகழும்படி. துருவல்—ஆய்தல். ஒன்றிய நிலை-சிவயோகம். பொன்றலில் புகழ்-அழிவில் புகழ். சத்து சித்து ஆனந்தம்-சச்சிதானந்தம் மாசு—குற்றம். இல்லா-இல்லாத. மணி—மாணிக்கம்

8 குமரகுருபரர்—திருமலை பூபதி காலத்தவராவர்; ஆதி குமரகுருபரர். வெள்ளியம்பலப் பெரியோன்—வெள்ளி யென்றும் வெள்ளியம் பலத் தம்பிரான் என்றும் வழங்கப்பெறுவர். சிவப்பிரகாசர்—வீரசைவர். துறையூரில் இவர் சமாதி கொண்டுளார். கதித்திடல்—விளங்கல். மரபினர்—மடத்துச் சம்பிரதாய முணர்ந்தவர்.

9 அட்டமாசித்தி, அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசித்துவம், வசித்துவம். இவற்றின் விளக்கம் திருவிளையாடற் புராணத்துட் காண்க. செந்தில்—செந்தூர். இடர்—துன்பம். ஊமர்—ஊமைகள். மலைக்கோன்-மலைநாட்டரசன். கொலைப்பேய்-பிரமகத்தி. கனம்-பெருமை. கண்விரியம்மை-

பக்கம்.

9 விசாலாட்சி. தெருள்—தெளிவு. நானம்—கத்தூரி. மீனக்கண்ணி—மீனாட்சி. இத் திருத்தளியில் பூசை புரிந்தருள்வது, கூடலுடையாரை ஆகலின், சொக்கலிங்கபூசை சொல்லப்பட்டது. முப்பானவசரம்—முப்பதவசரம்.

11 திருவினை—ஆக்கத்தினை. இருவினை—நல்வினை தீவினை. ஒருவல்—நீங்கல். இன்னே—இப்பொழுதே. முத்தமிழ்—இயல், இசை, கூத்து என்னும் மூவகைத் தமிழ். உலகியல் இன்பம்—உடலின்பமாம். உயிரின்பம்—ஆன்மசுகம். முத்தியாம். எவ்வம்—துயர். அகம்—மனம். அமர்த்தல்—எழுந்தருளச்செயல்.

உண்முகம்—அகமுகம். (உள்ளிடம், புறவிடம்) இறைவன்—எல்லா வுயிர்களிடத்துந் தங்குபவன். இறைவனை யகத்தினிற் காணலாம்—புறத்தினில் காண்டற்கரிதாம் நம் மாசிரியமூர்த்திகளை இருதிறத்துங் காண்டல் கூடும், என்பதே ஏற்றமுடைத்தாம். இச்சித்தார்—விரும்பினவர்.

12 முனிவரர்-தம்பிரான் சுவாமிகள். உலகியல் அறிவு—ஒப்புரவு. உயர்குணம் — ஆசிரியத் தன்மை. வேட்கை கிளர்தல்—விருப்பமிகுதல். தேசு—ஒளி. சிவப்பேறு—இரண்டறக்கலத்தல். ஒருமையொடும் புரிதல்—சிவயோகம் புரிதல். சரோருக ஓடை—தாமரைத் தடாகம்.

பக்கம்.

13 பொன்னி—காவிரியாறு. பதி, பசு, பாசம்—முப்பொருள். தோய்தல்-திளைத்தல். வந்தனை-வணக்கம். சீர்—தாளம். பாங்கினர்—தமிழ் மறைவாணர்; ஓதுவார். பாடியமுணரும் பன்மொழி முனிவரர்—ஸ்ரீ ஈசான சிவாசாரியார்; இலக்கணம் ஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள். விண்ணிடைப்புலவர்—தேவர்கள். மாகம்—ஆகாயம். வரை—எல்லை. வயங்கல்—விளங்கல். நாப்பண்—நடுவிடம். அத்தாணி—அரசிருக்கை மண்டபம். அறிவு அரி இருக்கை—ஞானச் சிங்காதனம்.

14 நியமம்—கோயில். மடாலயம். ஊன்—உடல். நேடுதல்—தேடுதல். அரிமதி—ஆவணி மாதம். நால்நிலை—சரியையாதி நிலைகள் நான்கு. சிறப்பு—விழா. அலகு—எண். வீறு-பெருமை.

15 முனைதல்—தூண்டல். ஒருமதி—சந்திரன். ஆரியன்–ஆசிரியர். ஆரியம்-தூய்மை. இகவா–நில்லா. பொருவ-ஒப்ப. மேல் மதியினையொப்ப அருட்கலை வீசியும் என வொப்புப் பொருள் காண்க. ஒருமொழி—சத்தியம்; உறுதி. கதுமெனல்—விரைவுக் குறிப்பு. துங்கம்—உயர்வு; தூய்மை.

16 தேவகோட்டம்-திருக்கோயில்கள். திப்பியம்-திவ்வியம்; மேன்மை. ஆலயநிலை—கோயில் நிலை. ஆ—வியப்பு, லயம்—ஒழுங்கு. கண்

பக்கம்.

16 காணிப்பு—மேற்பார்வையாளர் (சோதகர்) இருதிறநிலே—இன்னிலே, துறவுநிலே. நயப்பு—விருப்பம். ஓர்தல்—உணர்தல். விளேயுள்—நன்செய். நிரக்குவது—நிரம்பியது. நரைத்த சொல்—வெள்ளேச்சொல். அரி—திருமால்.

17 சிற்றம்பலம்—சிதம்பரம். காழி—சீகாழி. வெண்காடு—திருவெண்காடு. கமலே-திருவாரூர். தேசின்கோயில் — சூரியனர் கோவில். இடைமருது—திருஇடைமருதூர். வடுகன்—வைரவக்கடவுள், சட்டையப்பர். வீரன்—வீரபத்திரர். இழிப்பு—தாழ்வு. தண்டமிழ் சமயசாத்திரம் எனமாறுக. நகர்கள்—கோயில்கள். இலங்கல்—விளங்கல். திருமறை—தேவாரத் திருமுறைகள். அடைவு - ஒழுங்கு முறைமை. கவுணியர் கோமான்—திருஞான சம்பந்தப் பெருமான். கொம்மை—அழகு. போனகம்-உணவு. உய்ய—கடைத்தேற.

18 முந்தியதலம்—முற்பட்டதலம். காழியன்—மாநாகம். பன்னிரு திருப்பெயர்களே யுடையது. பிரமனூர், வேணுபுரம், புகலி, வெங்குரு, பூந்தராய், சண்பை, புறவம், கொச்சை, கழுமலம், தோணிபுரம், சிரபுரம், காழிநகர் என்பனவாம். ஆச்சாமரமுடைமையால்—ஆச்சாபுரம் எனவந்ததென்பர். ஒல்லே—விரைவு. தூயநன்னிலே—நிரதிசயவின்பம்—பேரின்பம். தென்றிருமுல்லேயெனவே, வட

பக்கம்.

18 திருமுல்லை யொன்றுண்டு. அது தொண்டை நாட்டுள்ள திருப்பதி. நியமம்—கோயில். ஆரணம்–வேதம். புள்–சம்பாதி; சடாயு. வேள்–முருகன். செவ்வாயும் வழிபட்டது.

19 சித்தாமிருதம்–தீர்த்தத்தின் பெயர். கொகுடி-காட்டு முல்லை. வாமன்—அழகன். தண்பணை—மருதநிலம். மயிடம்—எருமைக்கடா. ஊர்தி—வாகனம். அபிராமன் — சத்தியுபாசகராகிய அபிராமபட்டர்.

20 மருவு மாயூரம்–கௌரி மாயூரம் என்ற வழக்குண்டு. தமிழ்முனி–அகத்தியன். விமோசனம்–விடுகை. துலாக் காவிரித்துறையில் இடபத்தடி. இது இக்காலத்து இலிடர்கடம் எனப் பெயர் பரவியதுபோலும். திறல் கதி—வலிமை நடை.

21 உத்தரவாகினி—வடக்கு நோக்கி யோடுவது. திருத்தளி—கோயில். மான் அமர் கரத்தன்—மான் தழுவிய திருக்கையினன். அநுதினம்—தினந்தோறும். கட்டழித்தல்—நிலைகுலைவித்தல்.

22 பறியல்—பறியலூர், பரசலூர். பச்சைப் பதிகம்—நெருப்பின் வேகாமையின் இவ்வேடு இப்பெயர் எய்திற்று. சத்தவிடங்கத் தலம்—திருவாரூர், திருநள்ளாறு, திருநாகை, திருமறைக்காடு, திருக்கோளிலி, திருக்காறாயில், திருவாய்மூர் என்பனவாம்.

பக்கம்.

23 சேவை—வழிபாடு. அரசாங்கக் கட்டளை எனும் பெயருடையது. ஆரூர் நம்பி—சுந்தர மூர்த்தி நாயனர். படர்தல்—செல்லல். முளரி—தாமரை. முன்னல்-கருதல். வெம்பவம்–கொடிய துயர். பனசை — பனந்தாள். தாடகை — அந்தணப்பெண், அரக்கியன்று.

24 கலயர்—குங்கிலியக்கலய நாயனர். ஐயாறு—திருவையாறு.

25 திருவில்லோடும் வள்ளி தெய்வானை மகிணன்-வில்வேள். கண்டநற்காட்சி—ஞானம். அன்பு உரை அளை இய — அன்புமொழி கலந்த. புகன்று — விரும்பி. அணுகல் — நெருங்குதல். முகமன்-உபசாரம். நலம்-சேமம். முப்பொருள்-பதி, பசு, பாசம். செப்பம்—ஒழுங்கு.

26 விண்டிடல்—கூறல். திடமுறுகுறி—நூல்கள். பெருநிதியாளர் — பெருநிலக் கிழவர்; தன வணிகர். பணக்காரர் முதலானோர்.

27 தாரகாகணம்-விண்மீன் கூட்டம். பூரணமதி-நிறைமதி. மருவுறும் பயன் — குருவினைப் பணிந்து போற்றலேயாம்.

**ஸ்ரீ சண்முக தேசிகர் திருவடி வாழ்க.**

உ

குருபாதம்

# தருமபுர ஆதீன வெளியீடுகளின் விலைப்பட்டி

| வெளியீடு நெ. | விபரம். | விலை. அ. ப. | தபால் செலவு அ. ப. |
|---|---|---|---|
| 39 | புள்ளிருக்குவேளூர்ப் புராணம் | 8—0 | 3—0 |
| 40 | சித்தாந்த சைவ வினைவிடை | 3—6 | 1—9 |
| 41 | நால்வர் சரித்திரமும், அற்புதத் தேவாரத் திரட்டும் | 2—0 | 1—3 |
| 42 | ஆச்சாள்புரம் கோவில் வரலாறு | 1—6 | 0—9 |
| 43 | திருவையாற்றுக்கோவில் வரலாறு | 1—3 | 0—9 |
| 48 | திருக்கடவூர் உலா | 4—0 | 1—9 |

வேண்டுவோர் இவைகளுக்கு உள்ள தபாற்கூலி உள்படத் தொகையை முன் பணமாக அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

டெஸ்பாட்சிங் கிளார்க்கு,
தருமபுரம் ஆதீனம்,
தருமபுரம், மாயவரம்.